# தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்

## Tamilnadu Government Employees' Association

பதிவு எண் 237/84

**தோழர் எம்.ஆர். அப்பன் இல்லம்**

எண் : 46, தேரடித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை – 600 005.

தொலைபேசி எண் : 28441286, 28440938, 28443886 பேக்ஸ் : 28443601

மாநிலத் தலைவர்
**மு.சுப்பிரமணியன்**

பொதுச் செயலாளர்
**மு.அன்பரசு**

மாநில துணைத் தலைவர்கள்
**ந.குமாரவேல்**
**ஆ.செல்வம்**
**எஸ்.தமிழ்ச்செல்வி**
**சு. பார்த்திபன்**
**மொ.ஞானத்தம்பி**
**மு.சுப்பிரமணியன்**

மாநிலப் பொருளாளர்
**எம்.தங்கராஜ்**

மாநிலச் செயலாளர்கள்
**இரா. பன்னீர்செல்வம்**
**சி.ஆர். இராஜகுமார்**
**என். ஜனார்த்தனன்**
**தி. கலைச்செல்வி**
**எம். சௌந்தரராஜன்**
**ஏ. பெரியசாமி**


ஊடகச்செய்தி எண்.5/2017 நாள். 22.02.2017

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநிலத் தலைவர் மு.சுப்பிரமணியன் மற்றும் பொதுச் செயலாளர் மு.அன்பரசு ஆகியோர் வெளியிடும் பத்திரிகை செய்தி

ஊடகச் செய்தி

**தமிழக அரசின் ஊதிய மாற்ற குழு அறிவிப்பு !**

**தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் வரவேற்பு !!**

ஒளிவு மறைவற்ற, திறமைமிக்க, பொறுப்புள்ள நிர்வாகத்தை அளிப்பது நல்ல அரசின் இலக்கணமாகும். தமிழகத்தின் முதல்வர் பொறுப்பை திரு. எடப்பாடி பழனிச்சாமி அவர்கள் ஏற்றுள்ள நிலையில் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் அவருக்கு தனது பாராட்டுதல்களை அவர் பதவி ஏற்ற உடனேயே தெரிவித்தது. மேலும் அவர் முன் உள்ள முக்கிய பிரச்னைகளில் முதன்மையானதும், உடனடியாக கவனிக்கப்பட வேண்டியமானதும், அரசு ஊழியர்கள் பிரச்னை என்றும் அதன் பேரில் உடனடி கவனம் செலுத்த வேண்டும் என்றும் எமது சங்கத்தின் 20-02-2017 தேதியிட்ட அறிக்கையில் தெரிவித்து, அந்த பிரச்னைகளையெல்லாம் பட்டியலிட்டிருந்தோம்.

நாங்கள் கேட்டிருந்த கோரிக்கைகளை கவனித்து அவற்றிலுள்ள அவசரம் மற்றும் அவசியங்களை கருத்தில் எடுத்துக்கொண்டு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் இன்று (22-02-2017) ஒரு முக்கிய அறிவிப்பினை அதாவது தமிழக அரசு ஊழியர்களுக்கு வழங்க வேண்டிய 8வது ஊதிய மாற்றம் குறித்து பரிசீலித்து நான்கு மாதத்தில் அறிக்கை சமர்ப்பிக்க 5 நபர் கொண்ட ஒரு அலுவலர் குழுவினை அமைத்துள்ள அறிவிப்பினை வெளியிட்டுள்ளார். தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் முக்கிய கோரிக்கைகளில் ஒன்றினை ஏற்று உடனடியாக 8வது ஊதிய மாற்ற அலுவலர் குழுவை அமைத்திட்ட மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு தமிழகத்தில் உள்ள அனைத்து அரசு ஊழியர்கள் சார்பில் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் நெஞ்சார்ந்த வாழ்த்துக்களையும், வரவேற்பையும் தெரிவித்துக்கொள்கிறது.

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் உள்ளிட்ட அனைத்து சங்கங்களும் மறைந்த முன்னாள் முதல்வர் மாண்புமிகு செல்வி ஜெயலலிதா அவர்களிடம் அரசு ஊழியர்கள் பணி தொடர்பாகவும், ஊதியம் மற்றும் ஓய்வூதியம் தொடர்பாகவும் பல்வேறு கோரிக்கைகள் வைத்து அந்த கோரிக்கைகளை முன்னாள் முதல்வர் மாண்புமிகு செல்வி ஜெயலலிதா அவர்கள் மூத்த அமைச்சர்கள், தலைமைச் செயலாளர் மற்றும் நிதித்துறை செயலாளர் மூலம் ஆராய பணித்து அவர்களும் பல்வேறு சங்கங்களின் பிரதிநிதிகளை அழைத்துப்பேசி

...2

# தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்
## Tamilnadu Government Employees' Association

பதிவு எண் 237/84

**தோழர் எம்.ஆர். அப்பன் இல்லம்**

எண் : 46, தேரடித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை – 600 005.

தொலைபேசி எண் : 28441286, 28440938, 28443886 பேக்ஸ் : 28443601




அதன்பேரில் 19-02-2016-ம் தேதி தமிழக சட்டமன்றத்தில் தமிழ்நாடு சட்டப்போவை விதி 110ன் கீழ் மாண்புமிகு முன்னாள் முதல்வர் அவர்கள் 11 அறிவிப்புகளை வெளியிட்டார்கள், அந்த அறிவிப்புகளில் முக்கியமானதும் தமிழக அரசுத்துறைகளில் பணிபுரியும் அனைத்து ஊழியர்களின் எதிர்பார்ப்புக்கு உள்ளாகியிருப்பதும் பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தை ரத்து செய்து பழைய ஓய்வூதியத் திட்டத்தையே செயல்படுத்த வேண்டும் என்பதாகும். அதனை ஆராய்ந்து அரசுக்கு பரிந்துரைக்க அமைக்கப்பட்ட வல்லுனர் குழுவின் பரிந்துரை ஓராண்டு காலமாகியும் இன்னும் அரசுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை. இடையில் வல்லுனர் குழுவின் தலைவர் பதவியை இராஜினாமா செய்துவிட்ட நிலையில் பரிந்துரை கிடப்பில் போடப்பட்டுள்ளது. மாண்புமிகு தமிழக முதலவர் அவர்கள் இதை உடனடியாக பரிசீலித்து பங்களிப்பு ஓய்வூதியத் திட்டட்தை ரத்து செய்து பழைய ஓய்வூதியத் திட்டமே தொடர உத்தரவிட கேட்டுக்கொள்கிறோம்.

மேலும் மறைந்த மாண்புமிகு முன்னாள் முதல்வர் அவர்கள் பிறப்பித்த மேற்சொன்ன 110 விதியின் கீழான அறிக்கையில் ஊதிய விகிதங்கள் மாற்றி அமைத்தல், சிறப்பு காலமுறை ஊதியம், தொகுப்பூதியத்தின் கீழ் பணிபுரியும் ஊழியர்களை காலமுறை ஊதியத்தில் கொண்டு வருதல் போன்றவை குறித்து ஊதியக்குழு மூலம் பரிசீலிக்க உத்தரவிடடுள்ளார். மறைந்த மாண்புமிகு முன்னாள் முதல்வர் அவர்கள் ஆணையிட்டிருந்த இந்த உத்தரவினை மாண்புமிகு முதல்வர் அவர்கள் நடைமுறைப்படுத்த வேண்டும் என்று தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் வலியுறுத்துகிறது.

இவைகளுடன்

1.1.2016 முதல் 20 சதவீதம் இடைக்கால நிவாரணம் வழங்கிடவும்

தொகுப்பூதியம், மதிப்பூதியம், தினக்கூலி, அவுட்சோர்சிங் முறையிலான பணி நியமனங்களை ரத்து செய்து, காலியாக உள்ள பணியிடங்களை காலமுறை // ஊதியத்தில் பணியமர்த்திடவும்

சாலைப் பணியாளர்களின் 41 மாத பணி நீக்கக் காலத்தை, பணிக்காலமாக அறிவித்திடவும்

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களை கேட்டுக்கொள்கிறது.

**(மு.அன்பரசு)**
பொதுச் செயலாளர்

பெறுநர்

அனைத்து ஊடகங்கள்